# கைத்தொழில் பாதுகாப்பு வார
# சிறப்பு வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | – | விதியா ! சதியா ! தப்பா! |
| வெளியிட்ட ஆண்டு | – | கார்த்திகை – 2006 |
| பிரதிகள் | – | 300 |
| வெளியீடு | – | பொறியியலாளர் - சி.மகேந்திரராஜா<br>C.Eng.MIEE (Sri Lanka)<br>MIOSH (U.K) |
| அச்சுப் பிரசுரம் | – | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>இல.424, காங்கேசன்துறை சாலை,<br>யாழ்ப்பாணம் |
| வடிவம் | – | சிறுகதை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியா !
# சதியா !
# தப்பா !

பொறியியலாளர் சி.மகேந்திரராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழில் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு முத்தரப்புக் கருத்தரங்கில் பங்குபற்றிய எனக்கு தொழில்சார் பாதுகாப்பு சுகாதாரத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் Jukka-Takala அவர்களுடன் கருத்துப் பரிமாறும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள தொழில்நிறுவன நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அந்தச் சந்திப்பின் விளைவே இந்தச் சிறுகதையினை எழுத உந்துசக்தியானது. நான் பல தொழில்சார் விபத்துக்களை விசாரணை செய்ய சென்ற சமயங்களில் என்னை யறியாமலேயே கண்ணீர் சிந்தினேன். அவற்றில் ஒன்றினை கதை வடிவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செம்பியின் செல்வி மலர் சின்னையா அவர்கள் சமூக கதையாக வடிவமைத்துத் தந்தமை எனக்குக் கிடைத்த பேருதவியாகும்.

மேலும் தொழில்சார் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கு உதவும் வகையில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளர் திரு.ராஜ்குமார் அவர்கள் எனது கையேடுகளையும் இந்தச் சிறுகதையினையும் இலவசமாக சமுதாயத்தின் நன்மை கருதி அச்சிட முன்வந்தமைக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது அபிப்பிராயத்தின்படி சிவில் யுத்தத்தினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அகால மரணங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கவீனர்களாவதையும் எம்போன்றவர்களால் தவிர்ப்பது கடினமாக இருக்கும் பொழுது தொழில்சார் விபத்துக்களினால் ஏற்படும் அகால மரணங்களையும், அங்கவீனர்களாவதையும், அபாய நிகழ்வுகளால் உடமைகள் நாசமாவதையும் தவிர்க் கலாம்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்ற பழமொழிக்கிணங்க பாதுகாப்புப் பழக்கத்தினை சிறுவயதிலேயே கடைப்பிடித்தால் உண்டாகும் நன்மையினை நாம் அறிந்து கொள்ளலாம்.

இறுதியாக "There is a Safe way for Every thing" (ஒவ்வொரு சம்பவத்திற்கும் பாதுகாப்பான வழி உண்டு). என்பது தொழில்சார் பாதுகாப்பு சுகாதார வல்லுனர்களின் சுலோகமாகும்.

இந்த சிறுகதையை வாசித்து எமது சமுதாயம் பலனடைய வேண்டும் என்பதே எனது குறிக்கோளாகும்.

***பொறியியலாளர் சி. மகேந்திரராஜா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியா! சதியா! தப்பா!

இலங்கையிலிருந்து வந்த செய்தி அவள் காதில் கேட்டதும் சுவிற்ஸலாந்தே இருளில் மூழ்கிவிட்டது போல் உணர்ந்தாள்.

இலங்கையின் அவலங்களைப் பொறுக்கும் சக்தியோ, தாங்கும் வல்லமையோ இல்லாமல் அவளுடைய பெற்றோரும் இரு அண்ணன்மாரும் அவருமாக சுவிற்ஸலாந்தில் குடியேறினர். அங்கு அவர்களுடைய விடாமுயற்சியால் மகிழ்வில் திளைத்தவர்களுக்கு அந்தச் செய்தி மீளமுடியாத துயரை மீண்டும் கொடுத்தது.

தன்னுடைய ஒரேயொரு மகளின் அன்பிலும், இருமகன்மார்களின் உழைப்பிலும், தன்னுடைய அன்பான மனைவியின் சமையலிலும் இன்பத்தில் திளைத்திருந்த கார்த்திகேசு, சுவிற்ஸலாந்தில் தன்னுடைய மகளை உயர்ந்த கல்வியைக் கற்க வைத்ததுடன் உயர் தொழிலிலும் உயர்த்தி விட்டார். மகளுடைய கல்யாணமே அவருடைய சந்தோஷத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது.

இலங்கையில் வசித்து வந்த தன்னுடைய அண்ணனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் மகளுக்கு பொருத்தமான வரன் பார்க்கும்படி கூறி, வெகுவிரைவில் முடிவை அறிவிக்குமாறும் கூறினார்.

இரு வாரங்களுக்குப் பின்னர் திரும்பவும் தன்னுடைய அண்ணனை தொலைபேசியில் தொடர்புகொண்டார். "தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்திற்கு முன்னர்தான் மாப்பிள்ளை வீட்டால் வந்தேன். நான் சாப்பிட்ட பின்னர் தொலைபேசி எடுக்கலாம் என்று நினைத்தேன். நீங்கள் எடுத்துவிட்டீர்கள் நல்லதாய்ப் போய்விட்டது. சரி விடயத்தைச் சொல்லுகின்றேன்". என்று தொடர்ந்தார்.

"கார்த்திகேசா! - தம்பி உங்களுடைய மகள் படித்த சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் படித்த பையன். மீசாலையில் அரசடி றோட்டில் வசித்து வருகினம். தகப்பனார் பரவாயில்லை தோட்டம் துரவென்று செய்யினம். அவ்வளவு பெரிதாக இல்லாமல் வாழ்ந்து வருகினம். இவ்விடம் இப்பொழுது யார்தான் நன்றாக இருக்கினம்". இடையில் குறுக்கிட்ட கார்த்திகேசு ஏன் அண்ணை! நல்ல இடமாக கொஞ்சம் பணம்பந்தி அது இது என்று பார்க்கலாம்தானே.

தம்பி! உனது எதிர்பார்ப்பிற்கு தகுந்த மாப்பிள்ளை இலங்கையில் இருக்கினமோ! படித்தவன் பணக்காரன் என்று தலைநிமிர்ந்து தன்னாட்சி நடத்தினவைகளெள்ளலாம் அந்த இலட்சணத்தோட வெளிநாட்டுக்குக் குடும்பத்தோட உன்னைப்போல் சென்று விட்டனர். வெளிநாடு போகாமல் நின்றவர்கள் தேய்ந்து தேய்ந்து வருகினம். அவர்களுடைய பிள்ளைகளும் அற்ப சொற்பத்தை வைத்துக் கொண்டு அட்டகாசங்கள், அடாவடித்தனங்கள். புதிதாகத் திடீரெ. பணக்காரராகி வாழ்வை வாழத் தெரியாமல், நவநாகரீக போர்வையில் தங்களை அழித்துக் கொள்பவர்கள் என்று பற்பல வடிவங்களில் இலங்கைத் தமிழ் சமூகம் மாறிக் கொண்டு இருக்கிறது. இங்கு இருப்பவர்களில் கொஞ்சப் பேர் இங்குள்ள அடக்கு முறைகள், அச்சங்களால் கொழும்பில் கொம்பியூட்டர் ஐ.சி.எம்.ஏ அது இது என்று படிக்குதுகள். இங்கு படித்து முடித்து விட்டு, இங்கு வேலை செய்ய மனமில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிற்கு வேலை பார்க்க போனவர்கள். இதில் யாரைத் தம்பி நல்லவன் என்று உரைத்துப் பார்க்கின்றது.

நான் பார்த்த சுரேஷைப் பற்றிப் பல ஆட்களிடம் விசாரித்தேன். எந்தவித மாசு மறையற்றவன் அடக்க ஒடுக்கமானவன். இரண்டு தங்கைமாரும் தாய் தகப்பனும் நல்ல பண்பாடானவர்கள். நான் எல்லோரோடும் பேசிப் பார்த்து விட்டேன். பொடியன் கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் வெட்டும் புள்ளியினால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வில்லை. கல்வியியற் கல்லூரிக்கு போகப் போகிறாராம். அதெல்லாம் முடித்துத் தங்கைமாருடைய திருமணத்தையும் முடித்துவிட்டுத்தான் சுரேசின் திருமணம் என்று பிடியாய் பிடித்து நிற்கினம்.

நான்தான் சீதனத்தைக் கூட குறையச் சொல்லி, இவ்விடமுள்ள வீடு, காணி பூமியைச் சொல்லி, சகோதரி களுக்கும் பின்னர் உதவலாம் என்றும், பையனை ஆறுமாதத்திற்குள் சுவிற்சலாந்திற்கு எடுத்துப் போடுவியள் என்றெல்லாம் குளைக்கு மேல் குளை அடிச்சுத்தான் சம்மதிக்க வைத்தேன். எங்களுடைய புறோக்கர் மயில்வாகனமும் வந்துதான் ஓரளவு சம்மதிக்க வைத்தார்.

இடையில் மறித்த கார்த்திகேயர் முடிவை சொல்லுங்கோ என்றார். எல்லாம் சம்மதம். சாதகமும் நூற்றுக்கு எண்பது வீதம் பொருத்தம். தாமதிக்க வேண்டாம் என்றார். சரியண்ண "எதற்கும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து பேசி ஒழுங்குகள் செய்து தகவல் தருகின்றோம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசரும் மனைவியும் மகளுமாக இலங்கைக்கு வந்தனர். சமாதான காலமாதலால் மிகமிக மகிழ்வோடு அண்ணனுடைய வீட்டில தங்கியிருந்தனர். ஊருக்கும் உறவுகளுக்கும் சொல்லி பதிவுத் திருமணம் மிக விமரிசையாக நிகழ்ந்தது. பெண்ணுடைய புகைப்படத்தையும் பார்க்காமல் தன்னுடைய குடும்ப நிலைக்காக சம்மதம் தெரிவித்த சுரேசின் மனம், திருமண எழுத்தன்று தனக்கென சுவிற்சலாந்திலிருந்து வந்த தேவகி உண்மையில் தேவதை யாகவே இருந்தாள். பருமனாகவும், விசித்திரமான அலங்காரங் களுடனும் இலங்கைக்கு வரும் நம் நாட்டுப் பெண்களைப் போலல்லாது எளிமையாகவும், அழகாகவும், அமைதியாகவும் நாணத்துடன் தன்னருகில் தலைகுனிந்தபடி வந்து அமர்ந்த தேவகி, பெண்ணிற்கு இலக்கணமாக இருக்கின்றாளே என்று வியந்தான். மனதிற்குள் தன்னையறியாமலே இறைவனுக்கு நன்றி கூறினான்.

தேவகி சுரேசின் படத்தைப் பார்த்திருந்தாலும் நேரில் பார்க்கும் பொழுது எப்படி இருப்பாரோ என்ற ஏக்கம் இருப்பினும் தன்னுடைய பெற்றோரும் பெரியதகப்பனாரும் சுரேசைப் பற்றி கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருந் தாள். கற்பனையில் சுரேசைப் பார்த்ததிலும் அவனுடைய கண்களும், அவளுடைய கண்களும் முதன் முதலில் சந்தித்த மறுகணம் பெண்மைக்கே உரிய நாணத்துடன் தேவகி மனம் நிறைவாகத் தலைகுனித்தாள். திருமண எழுத்தின் பின்னர் சுரேஸ் மாலை வேளைகளில் தேவகியின் வீட்டிற்கு சென்று வருவான். இருவரும் ஒரு மாதகாலம் வரை மனம் விட்டு பேசினர். இருவரும் அன்றில் பறவை போன்ற பாசப் பிணைப் பில் சிக்குண்டு இருந்தனர். அதேவேளை தேவகியினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாவும் வேலைக்கான விடுமுறையும் நெருங்கியமையால் தேவகியைச் சுவிற்சலாந்து வரவழைத்து விட்டது.

தேவகியின் பிரிவுத் துயரினால் சுரேஸ் வேதனையில் மூழ்கினாலும், தான் சுவிற்சலாந்திற்கு போவதற்கு முன்னர் தன்னால் உழைத்துக் கொடுக்கக் கூடிய அளவிற்கு தன் குடும்பத்திற்கு உழைத்துக் கொடுக்க வேண்டும் என விரும்பினான். நாட்டின் அடாவடித் தனங்களால் நல்ல வேலை தேடி வீட்டிற்கு வெளியே, ஊருக்கு வெளியே செல்ல சுரேசின் மனமும் பெற்றோருடைய வேண்டுகோளும் தடுத்தது. அருகில் உள்ள ஆலையின் உரிமையாளரான உடையாரிடம் சுரேஸ் சென்று தன் நிலைமையினைக் கூறி தொழில் பெற்றுக் கொண்டான்.

தேவகியுடன் பேசுவதும், தனக்கென்று வேலை கிடைத்தமையும் சுரேஸிற்கு வேதனையின் மத்தியில் ஓர் இன்பம். தனது தேவகிக்கு தான் தொழில் செய்வதைப் பற்றி அவன் தெரியப்படுத்தவில்லை.

தேவகியும் இடைக்கிடை அனுப்பும் பணத்திற்கு தொலைபேசிக்கு (Kit card) கிற்கார்ட் வாங்கி அவளின் தொலைபேசி அழைப்புக்கு மட்டுமே செலவழிப்பான். மிகுதிப் பணத்தை தாய் தந்தையருக்கும் சகோதரிகளுக்கும் உடுப்புகளும், நல்ல சாப்பாடுகளும் வாங்கிக் கொடுத்து மகிழ்ச்சியடைவான். சீதனமாகப் பெற்ற பணத்தை இரு சகோதரிகளுக்கும் சமமாகப் பகிர்ந்து வங்கியில் வைப்பி லிட்டான்.

அந்தப் பெரிய நிம்மதிக்குள் அவனிடம் ஏழ்மை மறையவில்லை. ஏன்? அவன் சிரமப்பட்டு சம்பாதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமில்லையே! அந்த மனக்கவலையை மறக்க அவன் ஆலையில் வேலை செய்தான். உழைத்த பணத்தை தன் குடும்பதித்தின் சந்தோசத்திற்காக செலவு செய்தான். சுவை மிகுந்த உணவருந்தி, உடுத்து வாழ்ந்தான். அப்படி வாழ்வதில் சந்தோசமடைந்தான். தான் தேவகியுடன் சுவிற்சலாந்திற்கு சென்றால் தன் குடும்பத்தோடு உணவருந்தி மகிழ முடியாது என்று நினைக்கும் போது அவனது மனம் பந்த பாசத்தில் திணறும்.

அன்று அதிகாலை சுரேஸ் படுக்கையில் இருந்து எழும்புவதற்கு மனமில்லாது எழுந்தான். நேற்று வந்த தூதராலய விசாவுக்கான அழைப்புக் கடிதம் சந்தோசத்தினைக் கொடுத்தாலும் கொழும்புக்குச் செல்ல இரண்டு நாட்கள் இருந்தமையால் அந்த இரண்டு நாட்களிலும் ஆலைக்குச் சென்று உழைக்கலாம் என்று நினைத்து அவசரமாக காலைக்கடன்களை முடித்து வேலைக்குப் புறப்படத் தயாரானான்.

தங்கையர் இருவரும், அண்ணா! இனிமேல் நீங்கள் வேலைக்குப் போகாமல் எங்களுடன் இருங்கள். நீங்கள் தேவகி அண்ணியிடம் சென்று விடுவீர்கள். அதனால் இரண்டு நாளும் தங்களுடன் இருக்கும் படி கேட்டனர்.

"இந்த மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனால் நான் போய்ச் சம்பளத்தைப் பெற்று வருகின்றேன்". என்று கூறிவிட்டு சுரேஸ் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஸ் தன்னுடைய கொழும்புப் பயணம் பற்றிக் கூறி தனது சம்பளத்தை வழங்குமாறு உடையாரிடம் கேட்டான். உடையாரும் சந்தோஷப்பட்டவராய் அவரும் சரிதம்பி, நான் ஒரு மணித்தியாலத்திற்குள் வந்துவிடுவேன். ஒரு மூடை நெல் அவசரமாகக் குத்த வேண்டும். அதனை செய்து விடு என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

எதிர் வார்த்தை பேசிப்பழக்கமில்லாத சுரேஸ் நெல்லைக் குத்துவதற்கு இணங்கி அந்த சமயம் மின்சாரம் இல்லாதபடியால் டீசல் இயந்திரத்தினை இயக்கினான் பாதுகாப்பற்ற தண்டிலுள்ள கப்பியிலிருந்து நெல் குத்தும் இயந்திரத்துக்கு வாரைப் போட எத்தனித்தான் எதிர்பாராத விதமாக சுரேஸினுடைய காற்சட்டை அந்தத் தண்டினுள் சிக்குண்டது.

அங்கே மிளகாய் அரைக்கவென வந்த நடராசா உடனடியாக டீசல் இயந்திரத்தை நிற்பாட்டினார். எனினும் கண்ணிமைக்கும் நேரத்தில சுரேஸ் அதனுள் சிக்குண்டு உயிரையே இழந்தான்.

நடராசா இந்த தகவலினை சுரேஸினுடைய வீட்டிற்குச் சென்று பெற்றோருக்கு அறிவித்தார். ஓடோடி வந்த தாய், தந்தை, சகோதரிகள் என்னதான் செய்யமுடியும். பேச முடியாமல், அழ முடியாமல் திகைத்து நின்றனர். விதியா! சதியா! புரியாத ஏக்கங்கள்.

யாரைக் குறை சொல்வது. முடிவுக்கு வராத யாழ்ப்பாண நிர்வாக கட்டமைப்பு. தொழிற்சாலை பரிசோதனைப் பொறி யியலாளரின் மேற்பார்வையின்மை, அவர்களின் கட்டாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை உணரப்படாமை, உணர்ந்தும் கால சூழ்நிலையால் சட்டம் நீதித்துறை மங்கு நிலை, லஞ்சத்தினால் பிழையினை சரியாக்கல், நிறைவேற்று அதிகாரிகளுக்கு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வின்மை, பொறியியல் வேலைத் தளங்களில் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுக்கத் தவறியமை போன்றவை சுரேசின் மரண அவலத்திற்கு வித்திட்டது. தொழில் பாதுகாப்பில் அக்கறையும் விசுவாசமும் கொண்டபல உத்தியோகத்தர்கள் இருந்தும், தங்களுடைய கடமைகளைக் காலச் சூழ்நிலையில் முறையாகச் செய்யவில்லை என்றும், சுரேஸ் போன்ற மனிதர்களின் அசட்டுத்தனத்தை நினைத்தும் மனம் வருந்தினர். செய்தி கேட்டு அவ்விடத்தில் கூடியோர் நடந்த பின் மனம் வருந்தி என்ன பயன்.

உடையார் தனது தவறை ஒப்புக் கொண்டு மரணச் சடங்கிற்காக ஒரு லட்சம் ரூபாய் தானாக மனமுவந்து கொடுத்தார். எனினும், அந்த உயிரோடு இழை யோடியிருப் போருக்கு அவர் கோடிகோடியாக காலம் காலமாக கொடுத்தாலும் அவ உயிருக்கு ஈடாகுமா?

சுரேசின் தந்தை தேவகிக்கு எப்படி அறிவிப்பதென்று திணறினார். சுரேஸிற்கு உரித்தானவள் தேவகி அவளுக்கறி வியாது இருப்பது தப்பு. தேவகி கேட்டதும் என்ன செய்வாளோ என்ற அச்சம்.

தேவகியின் பணத்தைப் பெற்றுத் தன் பெண் பிள்ளைகளின் பெயர்களில் வைப்பிலிட்டது, சுரேசுடன் எழுதப்பட்ட திருமண எழுத்து தேவகியின் வாழ்க்கையில் அவளது ஆயிரம் காலத்து வாழ்க்கை வரலாற்றில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும்? சீதனக் கொடுமையால்தான் தன் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகளுக்காகவும் தேவகியிடம் பணம் பெற்றேன். என்று தான் அறுந்து போகும் இந்தச் சீதனக் கொடுமை? ஐயோ! அவளின் சுரேஸை எப்படிக் கொடுப்பேன் என்று தனக்குள் குமுறிய பொழுது அய்யோ! அம்மா! தேவகி! என்று தன்னையறி யாமலேயே கதறியபடி வீழ்ந்தார்.

தேவகியின் பெரியப்பா (கார்த்திகேயரின் அண்ணன்) செய்தி கேட்டு இடிந்தவர் போல மரணச் சடங்கில் கலந்து கொண்டார். சுரேஸின் அம்மாவை தேற்றியவர் விதியா சதியா என்று தெரியாமல் ஆறுதல் கூறிச் சென்றார்.

இச் செய்தியை பெரியப்பா மூலம் அறிந்த தேவகி தொலைபேசியை வைக்க திராணியற்று அம்மா என்று மயங்கி விழுந்தாள். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் எல்லோருமே வீட்டில் நின்றார்கள். கார்த்திகேசர் மகளின் நிலையைப் பார்த்ததும் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டு தொலை பேசியில் தகவலையறிந்து மற்றவர்களுக்குச் சொன்னார்.


ஜெனிவாவில் மட்டுமல்ல, சுவிஸ்சலாந்தில் மட்டுமல்ல, இலங்கையில் மட்டுமல்ல எங்குமே இருள் சூழ்ந்தது போன்றிருந்தது .

***"வருவன வருமுன் மனிதர் – நாம்***
***விபத்தினைத் தவிர்த்திடுவோமா"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan Printers, jaffna.
021-2222717, 4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org